திரு. கே. டி. கே. தங்கமணி : இம் மாதிரியான பயிற்சி மதுரைப் பல்கலைக் கழகம் போன்ற மற்ற பல்கலைக் கழகங்களிலும் தொடங்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. "யுனெஸ்கோ" கேட்டுக் கொண்டதன் காரணமாகவும் பல்கலைக்கழக மானியக்குழு இதற்கு உதவி செய்ய முன் வந்ததன் காரணமாகவும் இப் பயிற்சி சென்னைப் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டது. அதுமாதிரி பயிற்சியை மற்ற பல்கலைக் கழகங்களிலும் நடத்த யூனெஸ்கோ முன்வந்து, பல்கலைக்கழக மானியக்குழு உதவி தருமானால் அந்தப் பல்கலைக் கழகங்களிலும் ஏற்பாடு செய்யலாம்.

முதியோர் கல்வி நிலையங்கள்

*** 250 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1966-67-ல் தமிழகத்தில் முதியோர் கல்வி நிலையங்கள் எத்தனை இருந்தன ?

(இ) 1973 மே வரை எத்தனை முதியோர் கல்வி நிலையங்கள் புதிதாகத் துவக்கப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 384, (இ) 1967-68-ம் ஆண்டில் 60 உழவர் செயல்முறை எழுத்து அறிவுத் திட்ட மையங்கள் ஃபார்மர்ஸ் ஃபங்ஷனல் லிட்ரரி சென்டர்ஸ் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டன. 1969-70-ம் ஆண்டில் முதியோர்ப் பயிற்சி மையங்கள், அடல்ட் லிட்ரஸி சென்டர்ஸ் என்ற பெயரில் 500 மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பயிற்சிக் காலம் நான்கு திங்கள்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, முதியோர்க் கல்வி நிலையங்களில் யார் பயிற்சி அளிக்கிறார்கள் ? அங்கு தொழிற்பயிற்சி ஏதாவது அளிக்கப்படுகிறதா ?

1973 நவம்பர் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதிலே தொழிற்பயிற்சி என்ற முறையில் அளிக்கப்படவில்லை. ஆங்காங்கு இருக்கிற துவக்கப் பள்ளி, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்து, அவர்களுக்குச் சிறிது ஊதியம் தந்து, முதியோர் மையங்களை அவர்கள் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். ஃபார்மர்ஸ் ஃபங்ஷனல் லிட்ரரி சென்டர்ஸ் ஏற்படுத்தப்பட்டு அந்தத் திட்டத்தின் மூலமாக ஓராண்டுக் காலம் பயிற்சி தரப்படுகிறது. வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கிற அந்த முதியோர்களுக்கு வேளாண்மைத் துறை பற்றிய அறிவை எந்த எந்த வகையில் புகுத்த முடியும் என்று பார்த்து, அத்தகைய அறிவு அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: இந்த முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது எந்த அடிப்படையில் துவக்கப்படுகின்றன? முன்பு ஊராட்சி ஒன்றியத்தின் கீழுள்ள எல்லாக் கிராமங்களிலும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களைக் கொண்டு மாலை நேரத்திலோ இரவு நேரத்திலோ முதியோர்க்குக் கல்வி புகட்டக்கூடிய ஏற்பாடு இருந்தது. இப்பொழுது அந்த ஏற்பாடு இல்லையே. முன்பு போல ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் அளித்து, எல்லாக் கிராமங்களிலும் முதியோர்க் கல்வி நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து, சிறப்பு ஊதியம் தந்துதான் முதியோர்ப் பயிற்சிப் பள்ளிகள் ஆங்காங்கு நடத்தப்படுகின்றன. 500-க்கு மேற்பட்ட முதியோர்ப் பயிற்சி மையங்கள் மாநிலத்தின் பல இடங்களில் துவக்கி நடத்தப்பட்டன. அதன் பயிற்சிக் காலம் நான்கு திங்கள் களாகும். ஃபங்ஷனல் லிட்ரரி சென்டர்ஸில் ஓராண்டுக் கால பயிற்சி பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த வகையில் வடார்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை கல்வி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி கல்வி மாவட்டத்திலும் 1970-71-ம் ஆண்டில் முறையே 60 மையங்கள் திறக்கப்பட்டு, நடத்தி முடிக்கப்பட்டன. 1968-69-ம் ஆண்டில் பயிற்சிக் காலத்தை ஓராண்டுக்கு நீட்டித்து, கோவை மாவட்டத்திலும் பொள்ளாச்சி கல்வி மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்திலும் தஞ்சை கல்வி மாவட்டத்திலும் ஏற்

படுத்தப்பட்டன. 1972-73-இல் பொள்ளாச்சி தஞ்சை, திருவண்ணாமலை, தூத்துக்குடி ஆகிய கல்வி மாவட்டங்களில் முன்பு நடத்தி முடிக்கப்பட்ட 60 மையங்களிலேயே மீண்டும் ஓராண்டுக் காலம் பயிற்சி நடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டம் கடலூர் கல்வி மாவட்டத்திலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை தவிர, மதுரை, திருச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் இத் திட்டத்தைச் செயல்படுத்த நடுவண் அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Apprentice teachers for elementary schools

* 251 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint more apprentice teachers for elementary schools in the State for the year 1972–73; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1972-73-ல் தொழில் பழகு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவில்லை. இந்தியா வெங்கும் படித்து வேலை வாய்ப்பு இன்று இருப்போருள் ஐந்து லட்சம் பேருக்கு 1973-74-ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் கூடுதலான ஆசிரியர்கள் பதவிகள் 10,200 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றுத் தேறி, ஐந்து வருஷமாக வேலையில்லாமல் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? அப்படியானால் எத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற கணக்கு சர்க்காரிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1970-ம் ஆண்டு நவம்பரில் 5,746 பேருக்குத் தொழில் பழகு ஆசிரியர் வேலை தரப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் முறையாக முழு நேர பதவிகளில் முழுச் சம்பளம் பெறும் ஆசிரியர்களாக அமர்த்தப்பட்டுவிட்டனர். மீதி இருந்த சுமார் 1,800 பேரும் ' ஐந்து லட்சம் பேர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் ' அடிப்